1982 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினருடைய உணர்வுகள் பரிசீலிக்கப் படும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டுப் பூச்சி வளர்ப்புத் திட்டத்தைக் கூட்டுறவுத் துறையில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போது கூட்டுறவுத் துறையின் மூலமாகத் தான் இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திருச்சி மாவட்டத்தில் பால்பவுடர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

* வினா எண் 703—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

திருச்சி மாவட்டத்தில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை. ஆனால் பால் பண்ணையொன்று அமைப்பதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கூட்டுறவு பால் நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே அவற்றையெல்லாம் பயன் படுத்தி ஒரு பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய முன் வருவாரா என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டில் நாள் தோறும் 10 டன் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை இப்பொழுது நடந்து வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக சேலத்திலும் கிருஷ்ணகிரியிலும் இரண்டு பால் பவுடர் தொழிற்சாலைகள் தொடங்க இருக்கிறோம். அதற்குப் பிறகு அவசியம் ஏற்பட்டால் மற்ற மாவட்டங்களில் தொடங்குவது பற்றி அரசு ஆய்வு செய்யும்.